செய்தி வெளியீடு எண்: 185 நாள் : 05.04.2016

**<u>தேர்தல் விதி மீறியதாக பெறப்பட்ட 2.86 லட்சம் புகார்களில் 2.77 லட்சம் புகார்களின் விளம்பரங்கள் அழிப்பு – இதுவரை 20.24 கோடி ரொக்கம் பறிமுதல்</u>**

தமிழ்நாட்டில் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டு, தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமல் செய்யப்பட்டுள்ளன. இன்று வரை அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்களின் சுவர்களில் விளம்பரம் செய்ததாக 60,789 புகார்களும், போஸ்டர் தொடர்பாக 85,058, பேனர்கள் தொடர்பாக 28,186 புகார்களும் உட்பட மொத்தம் 2,04,206 புகார்களில் 2,01,764 புகார்களின் விளம்பரங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. தனியார் சுவர்களில் விளம்பரம் செய்ததாக 29,385 புகார்களும், போஸ்டர் தொடர்பாக 36,244 புகார்களும், பேனர் தொடர்பாக 5,799 புகார்கள் உட்பட மொத்தம் 81,302 புகார்களில் 75,350 புகார்களின் விளம்பரங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. 1,127 புகார்களில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளன.

நேற்று (4.4.16) பறக்கும்படை சோதனையில் கிருஷ்ணகிரியில் ரூ.3.40 லட்சம், தூத்துக்குடியில் ரூ.8.80 லட்சம், தர்மபுரியில் ரூ.1.45 லட்சம், திருவள்ளூரில் ரூ.2.80 லட்சம் உட்பட மொத்தம் ரூ.16,44,900/– பறிமுதல் செய்யப்பட்டதால், 4.4.16 வரை மொத்தம் ரூ.8,32,88,810/– பறிமுதல் செய்யப்பட்டு உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நிலையான கண்காணிப்புக்குழு (SST) 4.4.16 அன்று மேற்கொண்ட சோதனையில் நாமக்கல் மாவட்டத்தில் ரூ.3.50 லட்சம், நாகப்பட்டினத்தில் ரூ.1.17 லட்சம், அரியலூரில் ரூ.1.22 லட்சம், விருதுநகரில் ரூ.2.25 லட்சம் என ஒருநாளில் மட்டும் ரூ.9,08,500/– பறிமுதல் செய்யப்பட்டது. தேர்தல் நடத்தை விதி அமல்படுத்தப்பட்டதிலிருந்து மொத்தம் ரூ.11,90,80,880/– இக்குழுவினரால் பறிமுதல் செய்யப்பட்டது.

அரசியல் கட்சி தலைவரின் படத்தை அகற்றாதது, கட்சி கொடியை அகற்றாதது, அனுமதியில்லாது பிளக்ஸ் போர்டு வைத்தது, அரசியல் கட்சி கொடியுடன் ஆட்டோ ஓட்டியது, வாகனத்தில் அரசியல் கட்சி தலைவர் படம், சின்னம் ஆகியவற்றை அகற்றாதது, சுவர் விளம்பரம் போன்ற காரணங்களுக்காக பல்வேறு அரேசியல் கட்சி தலைவர் படம், சின்னம் ஆகியவற்றை அகற்றாதது, சுவர் விளம்பரம் போன்ற காரணங்களுக்காக பல்வேறு அரசியல் கட்சியினர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**